Regd. No. M. 1530

BALAVINODINI

OR

THE CHILDREN'S FRIEND

An Illustrated Tamil Monthly for Children

TO INSTRUCT AND CHERISH
THE YOUNG HEARTS WITH SWEET INSPIRING
AND
EDUCATIVE NOVELTIES

Vol. VI] FEBRUARY 1924 [No. 2

EDITED BY
VARAKAVI TIRU
A. SUBRAMANYA BHARATI

PUBLISHED BY
SRI BALASUBRAMANYAM & Co.,
Royapettah P. O., MADRAS.

28 OCT 1924

IV. Vol. (1922) V Vol. (1923) with beautiful half-tone Illustrations

Gold Gilt Calico bind, each Rs. 2 0 0

Annual Subscription Inland Rs. 1—8
" " Foreign Rs. 2—0

N. B.—The Subscribers are requested to pay subscriptions to our agents only on obtaining our Bonafide receipts.

All Rights reserved by the Publishers.

Vol. VI. தொகுதி 6. | 1924ளு பிப்ரவரிமீ | **No. 2** பகுதி 2

CONTENTS—பொருளடக்கம்

	பக்கம்.
தெய்வவணக்கம்	33
ஹிதோபதேசம்	34
செய்ந் நன்றி மறந்த தீயன் கதை	35
திருமகள் வாசஞ்செய்யுமிடம்	43
சேவகத் தொழிலின் இழிவு	44
பட்டினத்துப் பிள்ளையார் சரித்திரம்	45
ஹாஸ்யம் (Bit)	51
பாலிகைகள் பணஞ் சேர்க்கும்பாடல்	52
ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு	54
சுதர்ப்பாட்டு	59
பசியாமுன் புசியேல்	60
வெகுமதி (Bit)	62
திருக்குறள் 5-ம அதிகாரம் இல்வாழ்க்கை	63

சித்திரப் படங்கள்.

நமது பாலவிநோதினிக்கு மாதந்தோறும் ப்ளாக் செய்து கொடுப்பவர் திடீரென்று காலஞ்சென்று விட்டமையினால், படங்கள் இந்தச் சஞ்சிகையில் சேர்க்கக்கூடவில்லை. அடுத்த சஞ்சிகையில், இதற்குரிய படங்களும் சேர்த்து அனுப்பித் தரப்படும். நேயர்கள் அதுபற்றிச் சிந்தியாதிருக்க வேண்டுகிறோம்.

பத்திராதிபர்.

குறிப்பு.—எமது கையொப்பமிட்ட எமது கம்பெனி ரசீது பெற்றுக்கொண்டு ஏஜெண்டுகளிடம் சந்தாத் தொகையைச் செலுத்தக் கோருகிறோம். எமது ரசீது இல்லாமல் போனால் ஒப்புக்கொள்ளப் பட மாட்டாது.

உ

செந்திலாண்டவன் திருவடி துணை

பாலவிநோதினி

அல்லது

குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

தொகுதி 6	1924ளு பிப்ரவரிமீ	பகுதி 2

தெய்வ வணக்கம்

சிகரதம ணியமேரு கிரிரஜித கிரிநீல
  கிரியெனவு மாயிரமுகத்
தெய்வநதி காளிந்தி யெனநீழ லிட்டுவெண்
  திங்கள் சங்கெனவும் ப்ரபா
நிகரெனவு மெழுதரிய நேமியென வுலகடைய
  நின்றமா முகிலென்னவே
நெடியமுது ககனமுக டுறவீசி நிமிருமொரு
  நீலக் கலாப மயிலாம்
அகருமரு மணம்வீசு தணிகை யபிராமவேள்
  அடியவர்கள் மிடியகலவே
அடல்வேல் காத்தசைய ஆறிரு புயங்களில்
  அலங்கற் குழாமசையவே
மகரகனக் கோமளக் குண்டலம் பலவசைய
  வல்லவுணர் மனமசையமால்
வரையசைய வுரகபில மசையவெண் டிசையசைய
  வையாளி யேறுமயிலே.

அருணகிரிநாதர் அருள் வாக்கு

ஹிதோப தேசம்.

1. மனிதனுக்கு வயிறு அவனுடைய சுகத்துக்காக ஏற்பட்டது. அதை ஏற்றத்தாழ்வில்லாமல் நிதானமாக வைத்துக்கொண்டிருந்தால் அவனுக்கு யாதொரு துக்கமுமில்லை. அதற்கு உணவுகொடுக்காமல் பட்டினி போட்டால் ஆயுள்குறையும். கணக்கும் காலஅளவுமின்றி உணவு கொடுத்துக் கொண்டே வந்தால் கொடியநோய்களுண்டாய் முடிவில் மரணம் நேரிடும். இதனாலேதான்—"பாலோடாயினும் காலமறிந்துண்" என்று பழமொழி வழங்குகிறது.

2. நன்றாய்ப் பசித்தபின்பே உண்ணவேண்டும். பசியாததன்முன் அநேகர் உண்கிறார்கள். அதனால் வரும் கேடுகளநேகமுண்டு. குழந்தைகளுக்கு அடிக்கடி தீனி கொடுத்து அவர்களுக்குத் தீனியின்மேல் ஆசையுண்டாக்கும் வழக்கம் நம்தேசத்தவர்களிட மிகுதியாயிருக்கிறது. அப்படிச் செய்வது குழந்தையை வளர்ப்பதல்ல. குழந்தையைக் கொல்வதாம்.

3. நாவடக்கமானது மனிதன் மேற்கொள்ள வேண்டிய முக்கியமான குணங்களில் ஒன்று. புத்திசாலி ஒருபோதும் சமயந்தப்பிப் பேசமாட்டான். பேசவேண்டிய சமயத்தில் பேசாமலுமிரான். அவனுடைய நாவானது ஏனையருடைய பொக்கிஷத்திற்கு ஒரு சாவி போலிருக்கும்.

4. ஒருகாரியத்தை முடிப்பதன் பொருட்டு ஒன்றுகூடினால் பிறகு பிரிவது கூடாது. ஒருமித்து நின்று உறுதியாயுழைக்கவேண்டும். அபிப்பிராய பேதமுண்டானால் அதைப்பொறுத்துக் கொள்ளவேண்டும். இடம் பொருள், ஏவல்களைச் செவ்வையாய்க் கவனிக்கவேண்டும். அப்பொழுது தான் மேற்கொண்ட காரியம் செவ்வையாய் முடிவுபெறும்.

184337

செய்ந்நன்றி மறந்த தீயன் கதை.

ஓர் ஊரில் கௌதமன் என்று ஒரு வேதியனிருந்தான். அவன் தன் குல வழக்கப்படி வேதமோதுவதை விட்டுப் பொருளை ஏராளமாய்த் தேட வேண்டுமென்று ஆசை மிகக்கொண்டு அலைந்தான். ஒரு சமயம் அவன் திருடர்கள் நிறைந்திருந்த ஒரு சிறுகிராமத்திற்குப்போனான். அவ்வூரிலே இருந்த திருடர்களில் ஒருவன் பெரும் பொருள் படைத்தவனாயிருந்தான். அவன் எப்போதும் உண்மையே பேசுகிறவனாயும், எல்லோருக்கும் நன்மை செய்பவனாயும், இல்லையென்று தன்னிடம் வருபவர்களுக்கு இல்லையென்று சொல்லியனுப்பாமல் அவர்கள் விரும்பியதை மனமகிழ்ச்சியோடு கொடுக்கும் கொடையாளியாகவு மிருந்தான்.

பிராமணன் அந்தத் திருடனுடைய வீட்டிற்குப் போய் அவனைக் கண்டு தன் குறை கூறி யாசித்தான். திருடன் அவனுக்கு வசிக்க இடம் கொடுத்து ஒருவருஷச் சாப்பாட்டுக்கு வேண்டிய தானியமுங் கொடுத்தான்; இவற்றையல்லாமல் ஒரு பெண்ணையுந் தேடிக் கல்யாணஞ் செய்வித்தான். பிராமணன் இவை யனைத்தையும் பெற்றுக்கொண்டு வெகு சந்தோஷமாய் அவ்வூரிலே வசித்துவந்தான்; அந்தத் திருடனுக்கு வேண்டிய சகா

யமும் செய்து கொண்டிருந்தான். பிராமணன் தன் குல ஒழுக்கங்களை விட்ட பதிதனைப் விட்டபடியால் நாள்தோறும் அந்தத் திருடர்களோடு சேர்ந்துகொண்டு காடுகாடாயலைந்து பறவைகளைக் கொல்வதும் அவைகளையுண்பதுமாய்க் காலங்கழித்தான்.

இப்படியிருக்கையில் அந்த ஊருக்குத் தனது ஒழுக்கங்களிலே ஒரு சிறிதுந் தவறாத இன்னொரு பிராமணன் வந்தான். இந்த ஊரில் யாரேனும் பிராமணரிருக்கிறார்களா என்று விசாரித்து ஒழுக்கங்கெட்ட அதமனுடைய வீட்டிலே போய்த் தங்கினான். கௌதமனென்னும் அந்தப் பிராமணன் அந்த வேளையில் வெளியே போயிருந்தான். பிறகு சற்று நேரத்திற்கெல்லாம், கையில் வில்லும் தோளில் அடித்துக் கொன்ற பறவைகளின் சுமையுமுடையவனாய் இரத்தக்கறைபடிந்த ஆடையுடன் அவன் தன் வீடுவந்து சேர்ந்தான்.

அவனைக் கண்டதும் பிராமணன் வெறுப்படைந்து "இவனா பிராமணன்? என்ன அநியாயமிது?" என்றெண்ணி அவ்விடத்தில் வந்து தங்க நேர்ந்தது பற்றித் துக்கித்தான். கௌதமன் அவனைக் கண்டதும் அன்போடு வரவேற்று, இருப்பிடம் விசாரித்து, அவனருகே உட்கார்ந்து சற்றுப்பேசிக் கொண்டிருந்து, "இரவு இங்கேயே போஜனம் வைத்துக் கொள்ள வேண்டும்" என்று பிரார்த்தித்துக்கொண்டான்.

வேதவிப்பிரன், "நல்லது; நீர் செய்த உபசரணைக்கு நான் பரம சந்தோஷமடைகிறேன். நீர் இப்படி பிராமணர்களுக்குரிய ஒழுக்கங்களைக் கைவிட்டுக் கொடியகிராதகர்கள் செய்யும் கொடுந்தொழிலையேன் மேற்கொண்

டிருக்கிறீர்? இவ்வாறு நீர் குலத்தைக் கெடுக்கலாமா? பிராமணர்களுக்குரிய ஸத்வகுண சுபாவத்தை நீர் எண்ணிப் பாரும்?" என்று சொல்லி, "நான் இங்கே புசிப்பெடுத்துக் கொள்ளமாட்டேன்; இரவு தங்கியிருந்து காலையில் செல்கிறேன்" என்றான். கௌதமன் கேட்டுப் பெருமூச்சு விட்டுப் பிறகு "ஸ்வாமி, நான் பொருளில்லாத பரம ஏழை. வேதமும் ஓதவில்லை. பொருளைவிரும்பி இவ்வாறு ஒழுக்கங்கெட்டவனானேன். இப்போது உண்மையில் வருந்துகிறேன்" என்று விடைகூறித் தன்காரியத்தைக் கவனிக்கச் சென்றான்.

மறுநாள் அந்தப் பிராமணன் தான் போகவேண்டிய இடத்திற்குப் புறப்பட்டுப் போய் விட்டான். அவன் சென்றதும் கௌதமன் தான் பிராமணகுலத்திற் பிறந்தவனென்பதையே மறந்து, வழக்கம்போல் இருடர் கூட்டத்துடன் சேர்ந்து கொண்டு வெளியேபோனான்; வழியில் சில வர்த்தகர்கள் சென்றனர். அவர்களைக்கண்டதும் "அவர்களுடன் சென்றால் நாம் ஏராளமாகப் பொருள் தேடலா" மென்று ஆசைகொண்டு தன் கூட்டத்தை விட்டு அவர்களோடு சேர்ந்துகொண்டு சென்றான். நெடுந்தூரம் போனதும் அவ்வர்த்தகர்கள் திருடர்களிடம் அகப்பட்டுக் கொண்டார்கள். அவர்களையெல்லாம் திருடர்கள் கொன்று அவர்களுடைய பொருளை அபகரித்துக்கொண்டு ஓடிவிட்டார்கள். கௌதமன் அந்தச் சமயம் வெகுகஷ்டப்பட்டு மறைவானஇடத்திற்கு ஓடிஒளிந்து அவர்களிடமிருந்து தப்பிக்கொண்டான்.

பிறகு கௌதமன் அங்கெங்கும் பித்தனைப்போல்

அலேந்து திரிந்து ஒருபெரிய வனத்துக்குப்போனான். அங்கே ஒருபெரிய ஆலமாமிருந்தது. அதைக்கண்டதும் அதனருகே சென்று அந்தமரத்தின் நிழலில் உட்கார்ந்தான். இப்போது பரமசுகமாய்க்காற்று வீசியது. கௌதமன் நெடுநேரமலேந்து சிரமப் பட்டிருக்கிறபடியால் அந்தக் காற்றுப்பட்டதும் அவ்விடத்திலேயே படுத்துப் படுத்த சற்றுநேரத்திற் கெல்லாம் நித்திரை போய் விட்டான். இப்பொழுது சூரியாஸ்தமன மாயிற்று.

அப்பால் அந்த ஆலமரத்தில் ஒரு பெரிய கொக்கு வந்து உட்கார்ந்தது. அந்தக் கொக்கு தேவலோகத்திலிருந்து வந்தது. அது தேவலோகத்துப் பக்ஷி. அது வெகு அழகாயும் கம்பீரமாயுமிருந்தது. அது அம்மரத்திலே வந்து உட்கார்ந்த கொஞ்சநேரத்திற்கெல்லாம் கௌதமன் விழித்துக்கொண்டான். அந்தப்பக்ஷியின் அழகு அவனுடைய கண்களைக் கவர்ந்தது. உடனே அவன் அதைக் கொல்லப்பார்த்தான். அந்தக் கொக்கு மானிடனைப்போலப் பேசும் வன்மையுடையது. ஆகையினால் அது கௌதமனைப் பார்த்து, "நான் காச்யபரின் புத்திரன். என் பெயர் ராஜதர்மன். என்னுடைய தாய் தாக்ஷாயணி என்பவள். நான் பக்ஷி ரூபத்துடனிருப்பதால் இதிலே வசிக்கிறேன். என்னுடைய வீடுதேடி வந்த உமக்கு நான் உபசரணை செய்யவேண்டியவனாகையினால் அப்படி நேர்ந்தது பற்றி மகிழ்ச்சியடைகிறேன்" என்று கூறிச் சிலகாய்கனிகளைக் கொண்டுவந்து தந்து உண்ணக்கொடுத்துத் தன் சிறகினால் விசிறி அவனுடைய களைப்பைத் தீர்த்தது. அப்பால் இருவரும் பேசிக் கொண்டிருக்கையில் கௌதமன் தான் ஏழைப் பிராமண

னென்பதையும் பொருள்தேட அவாவுடைய வனுய்ப் புறப்பட்டு வந்ததையும் அதனிடம் தெரிவித்துக் கொண்டான்.

கொக்கு, "நல்லது, மித்திரனுலும், கல்வியினுலும், பொருளாலும், அறிஞர்கள் விரும்பத்தக்க அறிவினுலும் பொருளையடைதல் கூடும். நான் உமக்கு மித்திரனுய் விட்டபடியால் உமக்கு வேண்டும் பொருள் தருகிறேன். நான் சொல்லுகிறபடி நீர் செய்யும்" என்று கூறியது. கௌதமன் கேட்டு என்றுமடையாத சந்தோஷமடைந்து கொக்கை இருகரங்கள் குவித்து வணங்கி, "நான் பிழைத்தேன்! பிழைத்தேன்?" என்று கூறிக் "கட்டளைப்படி நடக்கிறேன்" என்றுன்.

கொக்கு, "இங்கிருந்து மூன்று யோசனை தூரத்தில் என்னுடைய நண்பனொருவனிருக்கிறுன். அவன் பெயர் விரூபாக்ஷன். அவன் இராக்ஷஸர்களுக்கு அதிபதி. அவன் மகா பலவான். அவனிடம் போய் என் பெயர் சொல்லு. உனக்கு விருப்பமான பொருள்களையெல்லாந்தருவான்" என்று கூறியது.

கௌதமன் கேட்டு மகிழ்ச்சியடைந்து மறுநாள் காலையில் கொக்கினிடம் விடைகொண்டு புறப்பட்டு அந்த இடத்துக்குப் போய்ச் சேர்ந்தான். விரூபாக்ஷன் அவனை நீ யாரென விசாரித்ததும் கௌதமன் தான் பிராமணனென்றும் ராஜதர்மா என்கிற கொக்கினுடைய நண்பனென்றும் சொன்னுன். சொன்னதும் இராக்ஷஸ ராஜன் சந்தோஷமாய் அவன் முகம்பார்த்து "வரவேண்டும், வரவேண்டும்" என்று கூறி அதிதிகளை உபசரிக்க வேண்டிய விதிப்படி உபசரித்து வீற்றிருக்கச் செய்து

வேதத்தில் சில கேள்விகள் கேட்டான். கௌதமன் "நான் வேதம் ஓதவில்லை. அதமனுனேன்" என, "கோத்திர மென்ன ?" என்று கேட்டான். இராக்ஷஸ ராஜன். கௌதமன் தன் கோத்திரமும் தன் ஊரும் பொருளிலே கொண்ட அவாவினுல் தான் குலப்பிரஷ்டனுன கதையையுங் கூறினுன்.

இதைக் கேட்டதும் இராக்ஷஸராஜன் வருத்த மடைந்து, "இவனுக்குப் பொருள் கொடுத்தனுப்ப வேண்டியது அவசியமாய் விட்டது ! பிரஷ்டனென்று இவனை ஒதுக்குவதற்கில்லை. இவன் என்னுடைய பரம மித்திரனுக்கு மித்திரனு யிருக்கிறுனல்லவா ?" என்று எண்ணி அவனைச் சிலநாள் அங்கேயே நிறுத்திவைத்துக் கொண்டிருந்து பிறகு அவனுக்கு இரத்தினமும் பொன்னும் மணியும் ஆடையும் அவன் அவாவடங்கக் கொடுத்தனுப்பினுன்.

கௌதமன தனக்கு விரூபாக்ஷன் கொடுத்த பொருளைச் சுமக்கமாட்டாமல் சுமந்துகொண்டு நடந்து ஆல மரத்தடிக்கு வந்துசேர்ந்தான். வெகு தூரம் சுமையுடன் நடந்துவந்தபடியால் அவன் களைத்துப்போனுன். ராஜதர்மா என்கிற அந்தக் கொக்கு கௌதமனைச் சந்தோஷத்துடன் வரவேற்று உபசரித்துக் காயும் கனியும் கொடுத்து அவனுடைய பசி தீர்த்தது. பிறகு அன்றிரவு இருவரும் நித்திரை செய்யத் தொடங்கினர். கொக்கு நன்றுய்த் தூங்கியது. கௌதமனுக்குத் தூக்கம் வரவில்லை. அவன், "நான் பேராசையினுலும் அவிவேகத்தாலும் சுமக்கமாட்டாத பொருளை ராக்ஷஸனிடமிருந்து அடைந்தேன். நான் வீடுபோய்ச் சேர இன்

னும் வெகுதூரம் நடந்தாக வேண்டும். வழியில் உயிரைக் காக்கத்தக்க உணவில்லாதவனு யிருக்கிறேன். இதற்கு என்ன செய்வது '' என்றெண்ணி வெகு நேரம் ஆலோசித்துப் பிறகு "இந்தப் பெரிய கொக்கைக் கொன்று எடுத்துக் கொண்டால் வழியில் ஆகாரத்துக்குப் போதுமானதாயிருக்கும்; ஆதலால் இதைக் கொன்று தானுகவேண்டும்" என்று தீர்மானித்துப் பெரியகல்லை யெடுத்து அதன்மேல் போட்டு அதைக் கொன்றான்.

அப்பால் அவன் அந்தப் பறவையின் சிறகையும் ரோமங்களையும் நீக்கி நெருப்பு மூட்டி அதனை அதிலே பக்குவஞ் செய்து எடுத்துவைத்துக்கொண்டு மறுநாள் காலையில் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றான்.

ராஜதர்மா வென்னும் கொக்கு அடிக்கடி விரூபாக்ஷனிடம் போவதுண்டு. அது கொலையுண்டபடியால் அதனை விரூபாக்ஷன் பாக்கக்கூடாமற் போயிற்று. ஆகவே அவன், தன் நண்பனுகிய ராஜதர்மா வராமலிருப்பதற்குக் காரணமென்ன வென்று ஆலோசித்துப் பார்த்துத் தன்புத்திரர்களை அழைத்து, "ராஜதர்மாவைக் காணவில்லை. அவனை இங்கு வந்து போன பிராமணப் பதிதன் கொன்றிருப்பான். அவன் ஒழுக்கங் கெட்டவனல்லவா? அவனை நம்புவதற்கில்லை. ஆகையினுல் ராஜதர்மாவைப் போய்ப்பார்த்து வாருங்கள்'' என்று கூறி அனுப்பினுன்.

அவர்கள் ஆலமரத்துக்கு வந்து பார்த்தனர். ராஜதர்மாவின் சிறகுகள் அங்கே கிடந்தபடியால் அது கொலையுண்டிருக்கிற தென நிச்சயித்து அதை விரூபா

க்ஷனுக்குச் சொன்னார்கள். விரூபாக்ஷன் உடனே இராக்ஷஸர்களுடனேடி எங்குந்தேடி அலைந்து கௌதமனை வழியில் கண்டு பிடித்து மடக்கிக் கொண்டு விசாரித்து உண்மை தெரிந்துகொண்டான். அவன் தன் புத்திரர்களை நோக்கி, "நமது நண்பனைக் கொன்ற இவனைக் கொன்று விடவேண்டியது தான் இனிச் செய்யத்தக்கது" என்றான். புத்திரர்கள், "இவன் பாபத்தைச் செய்தவன்; செய்கிறவன்; பாபபுத்தியுடையவன்; பாபத்திலுறுதியுள்ளவன்; பாபவடிவமானவன்; நன்றிகெட்டவன். ஆதலால் இவனைக் கொலைசெய்வதே சிறந்த தண்டனை; இவனைக் கொன்று நாமனைவரும் இவனுடைய மாமிசத்தைப் புசித்து விடுவோம்" என்றனர்.

விரூபாக்ஷன் "நன்றி கெட்டவனும் மகாபாபியுமான இவனைப் புசிக்க எனக்கு விருப்பமில்லை. மித்ரத்துரோகியாகிய இவனை வேலைக்காரர்களுக்கு உணவாக்குவோம்" என, வேலைக்காரர்கள், "இந்தப் பாவியின் இறைச்சி எங்களுக்கு வேண்டாம்" என்றனர். அப்பால் விரூபாக்ஷன், அவனை வெட்டிக் கண்டதுண்டமாக்கி, காட்டுவிலங்கினிடம் போட்டான். அவைகளும் அவனுடைய மாமிசத்தைத் தொடவில்லை.

விரூபாக்ஷன் அதைப்பார்த்து, "பிராஹ்மணனுடைய பொருளை அபகரித்தவனுக்கும் பிரஹ்மஹத்தி செய்தவனுக்கும் குருவின் மனைவியை இச்சித்தவனுக்கும் பிராயச்சித்தமுண்டு. நன்றி கொன்றவனுக்குப் பிராயச்சித்தமில்லை. மித்ரத்துரோகியைப் புழுக்களுங்கூடத் தின்பதில்லை என்று கூறுவார்கள். அதை இப்பொழுது நாம் பிரத்தியக்ஷத்திலே கண்டோம்" என்று சொல்லி வியப்படைந்தான். பிறகு விரூபாக்ஷன் ராஜதர்மாவிற்கு ஸம்ஸ்காரஞ் செய்வித்தான். அது தெய்வரூபம் பெற்றுத் தேவலோகஞ் சென்றது. இராக்ஷஸராஜன் அது கண்டு சந்தோஷமடைந்து தன் புத்திரர்களுடனும் ஏனைய ராக்ஷஸர்களுடனும் தன் இருப்பிடம் போய்ச்சேர்ந்தான்.

திருமகள் வாசஞ்செய்யுமிடம்

கடவாரணத்திலும் கங்கா ஜலத்திலும்
கமலாசனந் தன்னிலும்
காகுத்தன் மார்பிலும் கொற்றவரிடத்திலும்
காலியின் கூட்டத்திலும்
நடவாடு பயிரிலும் பொய்வார்த்தை சொல்லாத
நல்லோ ரிடந்தன்னிலும்
நல்லசுபலக்ஷண மிருக்தமனை தன்னிலும்
ரணசுத்த வீரர்பாலும்
அடர்கே தனத்திலும் சுயம்வரந் தன்னிலும்
அருந் துளசி வில்வத்திலும்
அலர்தரு கடம்பமலர் தனிலு மிரதத்திலும்
அதிசுகுண மானரூப
மடவாரிடத்திலும் குடிகொண்டு திருமாது
மாறாதிருப்ப ளன்றோ
மயிலேறி விளையாடு குகனே புல்வயனீடு
மலைமேவு குமரேசனே.

கடவாரணம்—யானை ; கமலாசனம் — தாமரைமலர் ; காகுத்தன்—ஸ்ரீராமன் ; கொற்றவன்—அரசன் ; காலியின் கூட்டம்—பசுக்கூட்டம் ; அடர்கேதனம்—சண்டைக் குரிய கொடி ; மடவார்—பெண்கள்.

சேவகத் தொழிலின் இழிவு.

ஒரு வேந்தன் தன் மந்திரியை அடிக்கடி காரணமின்றிக் கோபித்துக்கொண்டு வந்தான். மந்திரி வெகு நாள் மனம்பொறுத்திருந்தான். அரசன் அதனையறிந்து நடந்தானில்லை. ஒருநாள் ஒரு சிறு தவறுதலின் காரணமாக அரசன் தன் மந்திரியைப் பலவாறு திட்டி வேலையைவிட்டு நீக்கிவிட்டான்.

அப்பால் அரசன் வேறொரு மந்திரியை அமர்த்திக் கொள்வதற்காக முயற்சி செய்தான். அரசனுடைய குணம் எல்லோருக்குந் தெரிந்த விஷயமாதலால் ஒருவரும் அவன் கீழ் மந்திரியாயிருக்க முன் வரவில்லை. என்ன செய்வான். தக்க மந்திரியில்லாமல் அநேக காரியங்கள் தடைப்பட்டு இராஜ்யத்தில் பெருங்குறைகள் பல உண்டாயின.

இப்பொழுது தான் அரசனுக்கு முன் தன்னிடமிருந்த மந்திரியின் பெருமை தெரிந்தது. அவனுடைய குணங்களையும் புத்திசாலித் தனத்தையும் நினைத்துக் கொண்டு அரசன் வருந்தினான்; பிறகு ஒருநாள் மனந்துணிந்து மந்திரி வேலைக்கு வரும்படி பழைய மந்திரிக்குக் கடிதம் எழுதினான்.

மந்திரி, வேலையைவிட்டு நீங்கினதும் துறவியாய்விட்டபடியால் "இனி மந்திரி வேலைக்கு வர எனக்கு விருப்பமில்லை" என்று ஒரு கடிதமெழுதி யனுப்பினான். அரசன் அந்தக் கடிதங் கண்டதும், மந்திரி வேலைக்குத் தக்கயோக்யதையும் புத்திசாலித் தனமுமுடைய வேறு எவரையேனும் பார்த்து அனுப்பித் தரும்படி கடிதம் எழுதிக் கேட்டுக்கொண்டான்.

மந்திரியாகிய துறவி, "வேந்தே, புத்திசாலியாகிய எவனும் மந்திரிவேலைக்கு வரமாட்டான்" என்று கடிதமெழுதி விட்டான்.

பட்டினத்துப்பிள்ளையார் சரித்திரம்

(21ம் பக்கத் தொடர்ச்சி.)

சிவநேசச் செல்வர் சிவபதப்பேறு

இவ்வாறு வளர்ந்து வந்த திருவெண்காடர் ஐந்து வயதினை யடைந்தார். அவருடைய அவதார மகிமையை முழுதுங்கண்டு மகிழ பாக்கியமில்லாத சிவநேசர் சிவபதமடைந்தார். அவருடைய மனைவியாரும் மற்றுமவர் சுற்றத்தாரும் நண்பரும் அப்பொழுது பெருந்துயரமடைந்தனர்; அப்பால், இறப்பதும் பிறப்பதும் உலகத்திலே இயல்பாயுள்ள தென்பதை எண்ணி மனந்தேறிச் சிவநேசரை அடக்கம் செய்து அவர்க்குச் செய்யவேண்டிய நீர்க்கடனைத் திருவெண்காடரைக்கொண்டு செய்து முடித்தனர்.

பிள்ளையார் வித்தியாப்யாசம்

அப்பால் திருவெண்காடரின் அன்னையார் தமது தவச்செல்வமாகிய திருவெண்காடருக்கு அக்ஷராப்யாசஞ் செய்விக்கத்தக்க வயதுவந்தது கண்டு, ஒருநல்ல நாளிலே ஒருவேதியரைக்கொண்டு அவர்க்கு அக்ஷராப்பியாசம் செய்வித்தார். அதன்பின் பிள்ளையாரை அவரிடமே ஒப்புவித்

துப் பலகலைகளையும் பயிலும்படி செய்தார். பிள்ளையார், கண்டவர் எவரும் அதிசயிக்கும்படி வெகு விரைவில் சகல நூல்களையும் ஓதியுணர்ந்தார்; பின் சிலகாலத்தில் அவர்குற்றமற ஓதியுணர்ந்தவர்களிலே முதல்வராகவிளங்கினர். பூர்வவாசனையால் அவரிடம் சிவஞானம் தானே பிரகாசித்தது. சிவபக்தியும் சிவனடியார் பக்தியும் ஜீவகாருண்யமும் உலகவிஷயங்களிலே மனம் செல்லாமல் அருவருப்படைதலும் ஆகிய இப்படிப்பட்ட பெரியோர் ஒழுக்கங்களெல்லாம் அவரிடம் குடிகொண்டன. அவருடன் கூடவிருந்து வருகிறவர்களும் அப்படிப்பட்ட குணங்களையே மேற்கொண்டனர்.

பிள்ளையார் வஸ்துவிசாரம் செய்தல்

இப்படிப்பட்ட அரிய ஒழுக்கங்களிலே சிறந்திருந்த பிள்ளையார் சிவபூசையிலே சிந்தையுடையவரானர். சிவபெருமானைச் சதாகாலமும் தியானித்துக்கொண்டு உலக இயல்பைக் கவனிக்கத்தொடங்கினர்.—

இந்த உடம்பு புழுக்கள் நிறைந்த பாண்டம்போன்றது, அருவருப்பைத்தரத்தக்கது, நிலையானதல்ல, துன்பங்களுக்கு இடமாயுள்ளது. முதலில் இந்த உடம்பைத் தாயார் தனது என்கிறாள். பிறகு தந்தை தனது என்கிறான். மனைவியும் மக்களும் சுற்றத்தினரும் நமது என்பார்கள். நோய்களோ நமது என்று கூறுகின்றன. உடலிலிருந்து உயிர்பிரிந்தபின்போ நாய் தனது என்கிறது; நரி தனதென்கிறது; இவ்வாறே காகம், கழுகு, பருந்து, பேய் முதலிய ஒவ்வொன்றும் தனதென்று உரிமை பாராட்டுகின்றன. இவற்றிற்கு இடையிலே நானும் எனது எனது என்கிறேன். ஆலோசித்துப் பார்த்தால் இது

யாருடையதோ தெரியவில்லை. என்னைப் போன்ற எத்தனை பேருடைய உடம்புகள் அழிந்து போயின. பெரிய மரியாதையிலும் உபசாரத்திலும் உயர்வாயிருந்த உடம்பெல்லாம் உயிர் பிரிந்த பின் எவ்வளவு இழிவாகக் கருதப்படுகின்றன. உயிர் பிரிந்தவளவிலே, என் கண்ணே, என் ஐயா, என் அப்பா என்றழைத்ததெல்லாம் போய்ப் பிணமென்று சொல்லி "எடுங்கள் வீட்டை விட்டு! இடுங்கள் சுடுகோட்டில்! சுடுங்கள்!" என்கின்றனர். ஆகா! என்ன சொல்வது! எத்தனை பேர் சிறு குழந்தையாயிருக்கும் போதே அழிந்து போகின்றனர்? எத்தனை பேர் குமரப்பருவத்திலழிந்து போகின்றனர்? கிழப்பருவத்திலே அழிந்து போகிறவர்கள் எத்தனை பேர்? இவர்களை யெல்லாம் எண்ணித் தொலையுமோ.?

இவ்வளவநந்தங் கஷ்டங்களும் இந்த ஓர் உடம்போடு போகின்றனவா? இல்லையே! எத்தனையோ பிறப்புகள்! எத்தனையோ அவஸ்தைகள்! கல்லாய்க் காடாய், புல்லாய்ப் பூண்டாய்ப் புழுவாய் மிருகமாய், பாம்பையாய்ப் பறவையாய், மீனுய் அலகையாய், பேயாய், அரக்கராய், தேவராய் இவ்வாறு எவ்வளவோ அநந்தகோடி வகையான பிறவிகளிலே துன்பமடைய வேண்டியதாகிறது.

இவற்றை யெல்லாம் நினைத்தால் நெஞ்சு துடிக்கின்றது. எந்தக் காலத்தில் பிறப்பென்னும் பெரிய துன்பத்தை ஒழிக்க வழிகாண்பது?—என்றெண்ணிக் கண்ணீர் பெருக்கினுர்.

"பிறப்பென்னும் பேஸதமைநீங்கச்
சிறப் பென்னும் செம்பொருள் காண்பதறிவு"

என்னும் வேத வாக்கைச் சிந்தித்துச் சிந்தித்து உருகி

ஞர். பிறகு சிவ பூசையாலல்லது இந்தப் பிறவிப் பிணியைத் தீர்ப்பதற்குரிய வழி வேறில்லை யென்று துணிந்தார்.

ஆகவே, பிள்ளையார் சிவ பூஜை செய்யத் திருவுளங் கொண்டு "சிவ லிங்கத்தினை நாம் எவ்வாறு பெறுவது? எவ்வாறு அர்ச்சனை செய்வது? அவை குரு முகத்தால் அறிய வேண்டுவனவல்லவா? குரு எப்போது எங்கே பிராப்தமாவார்? எப்போது என்னை அடிமை கொள்வார்?"—என்று சிந்தித்துக் கவலை கொண்டு உணவிலும் நித்திரையிலும் இச்சையில்லாமலிருந்தார்; முயற்சியும் வரவரக் குறைந்தவராய்க் காணப்பட்டார். அவருடைய திருமேனி வரவர இளைத்தது! அவ்வாறு அவருடைய திருமேனி இளைத்துப் போவதைப்பார்த்த அவருடைய அன்னையார் ஒருநாளிரவில் மிகவும் விசனப்பட்டு அவரை யருகிலழைத்து, "ஏனப்பா இப்படி நாளுக்கு நாள் இளைத்துப்போகிறாய்? இதற்குக் காரணமென்ன? எனக்குக் கவலையாயிருக்கிறது. கொஞ்சம் சாப்பிடு" என்று சொல்லிக் கண்கலங்கினார். பட்டினத்தார், "அம்மா கவலைப்படவேண்டாம். எனக்கு உடம்புக்கு அசௌக்கியமில்லை. தவிர பசியுமில்லை. சாப்பாடு பிறகு பார்த்துக்கொள்வோம்" என்று கூறிப்படுத்தார்.

அவருடைய அன்னையாரும் வேறுபேசாமல் சிவபெருமானைத் தியானித்துக்கொண்டே படுக்கைக்குச் சென்றார். அப்பால் நடு இரவில் சிவபெருமான் திருவெண்காடருடைய கனவிலே ஒரு கிழப்பிராமண ராய்த் தோன்றி, "திருவெண்காடா, திருமேனி இளைத்ததா?"

என்று தடவினர். திருவெண்காடர் உடனே துணுக்குற்று விழித்தார்; தம்முன் தேகமுழுவதும் விபூதிதூளனம் செய்துகொண்டு ருத்ராக்ஷமாலை பூண்டு சிவப்பழமாய் ஒரு கிழப்பிராமணர் நிற்பதைக்கண்டு திடீரென்று எழுந்து, அவர் திருவடியிலே விழுந்து பணிந்து நின்று துதித்து—

என்னையனே! பெருந்தவமுடையவனானேன்! என் செயவல்லேன்! என்குருவே! என்தெய்வமே! என்னைக் கைவிடாதாளவேண்டும்—என்று அவர் திருவடியைப் பிடித்துக்கொண்டு கதறினர்.

பிராமணராகவந்த சிவபெருமான் அவருடைய அன்பைக்கண்டு அகமுருகி, "சிறுவனே, உன்னுடைய இனிய சொல்லால் மகிழ்ச்சியடைந்தேன்" என்று கூறி அவருடைய கருத்திற் கிசைந்தபடி திருக்குறிப்புக் காட்டி நின்றார்.

அதைக்கண்டதும் திருவெண்காட்டடிகள் மீண்டும் அவரை வணங்கி "எம்பெருமானே இன்றே, நல்ல நாள்! இன்றே நான் பிறந்தநாள்! இன்றே என்னை ஈன்ற அன்னையார் என்னை ஈன்றவரானார்! இன்றே என் தவம் பலித்தது! என்னை ஆட்கொள்ளவேண்டும். என் உடல் பொருள் ஆவி மூன்றையும் ஏற்றுக்கொண்டு உன் திருவருளையும் உன் திருவடிமலரையும் உன் திருவடிபணியும் அடியார் பணிவிடையும் எனக்குத்தரவேண்டும். தந்து என்னை அடிமைகொண்டாள வேண்டும்—என்று கூறிப் பலமுறை பணிந்து தம்மை மறந்து பரவசராய் நின்றார்.

இப்பொழுது ஐயர், அகமகிழ்ந்து, "திருவெண் காட, உன்னுடைய வேண்டுகோளானது மிகவும் சிறப் புடையது. சந்தோஷம்; இந்தப் பொருளால் எமக்காக வேண்டியது ஒன்று மில்லை. இந்தப் பூவுலகத்தையல்லா மல் ஸ்வர்க்கலோகத்தைக் கொடுத்தாலும் நாம் அடை யோம். அவையெல்லாம் நமக்கு விருப்ப மில்லாதவை. மகாப்பிரளய காலத்தில் சகல உலகமும் அழிந்துபோகு மாதலால் இவற்றுள் எதைக்கொண்டு யார் என்ன செய் வது? இந்தப் பொருளால் உனக்குச்சிறிது உதவியுண்டு; நீ இங்கே குரு, லிங்க, சங்கம பூஜைசெய்ய வேண் டியவனுகிருய்! ஆதலால் அதற்கு இது துணையாகும். அப்பனே, "இந்த மானிடப் பிறவி கிடைத்தற்கரிது. ஆதலின் நீ இந்தப் பொருளைக் கருவியாக வைத்துக் கொண்டு சிவபூசையும் அடியார் பூசையும் நடத்திவரு வாயானுல், நீ எண்ணியபடி யாவும் அடையப்பெறு வாய்!'' என்று கூறினர்.

திருவெண்காடர், முன்பே சிவாராதனையிலே சிந் தை கொண்டிருந்தபடியால் ஐயர் கூறிய அமுதத்திரு வாக்கு அவர்க்குப் பாலோடு தேன் கலந்ததுபோ லாயிற்று. ஆகையினுல், "இனி நானடையத்தக்கசெல்வமு மூண்டோ" என்றெண்ணி அவரைப் பணிந்து எழுந்து, "ஸ்வாமி, நான் செய்த தவமே தவம்! என் பாக்யமே பாக்யம்! என் புண்யமே புண்யம்? ஸ்வாமி, இனி அடி யேன் இதற்காகச் செய்யவேண்டிய தென்ன?'' என்று கேட்டார்.

ஐயா, "திருவெண்காடா, நாளையதினம் திருவோணத்தோடு கூடிய சோமவாரம்; மகாப்பிரதோஷ காலம்! ஆதலால் திருவெண்காடென்னும் திவ்யக்ஷேத்திரத்தை யடைந்து, சுவேதாரண்யப் பெருமானையும் அவருடைய இடது பாரிசத்தில் அமர்ந்தருளும் உமாதேவியாரையும் பூசை செய்; அந்த ஸந்நிதியிலிருந்து சிவனடியார்களை உபசரித்துவா. அங்கே வேதாகமங்களையோதியுணர்ந்த ஓர் அந்தணர் வந்து, உனக்கு நீ பூசித்தற்குரிய சிவலிங்கப் பெருமானை எழுந்தருளப் பண்ணிக் கொடுப்பார். தீக்ஷாவிதிப்படி உனக்குத் திருவெழுத்தை உபதேசிப்பார்; பூசை செய்யும் முறையையும் காட்டுவார். நீ அவரிடம் அவற்றைப் பெற்றுக் கொண்டு சிவபெருமானைப் பூசித்துவா. முடிவில் நீ பேரின்பமடைவாய்?" என்று திருவாய் மலர்ந்து திருக்கரத்தால் அவருடைய நெற்றியிலே விபூதியிட்டுத் தலைமேலே கைமலர் சாத்தி அபயமளித்து மறைந்தார்.

(வரும்.)

ஹாஸ்யம்

முத்து — கந்தா, பத்துவருஷத்திற்கு முன் மதுரையில் ப[illegible] பல்லவராயனென் றொருவனிருந்தானே அவனைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா நீ?

கந்தன் — ஏன் சிறுவயதில் நானங்கிருந்து அடிபட்ட[illegible]றேன்! ஏன் அவனை எனக்குத் தெரியாது.

முத்து — நீ எங்கெங்கே யாராரிடம் அடிபட்டாய் அந்த ஊரில்;

கந்தன் — நீ அடிபடாத இடத்திலெல்லாம் நான் அடிபட்டேன்.

18433T

பாலிகைகள் பணஞ்சேர்க்கும் பாடல்

ஏலேலோ ஏலேலோ-பொன்மணியே ஏலேலோ ஏலேலோ
குணமிருந்தாலொன்று மில்லை நல்ல-குலமிருந்தாலொன்று
மில்லை
பணமிருந்தாலவர்காலிற் பணிவார்கள் ஜகத்திலுள்ளார்

(முடுகு)

பணமிருந்தாலது பத்துவகைசெய்யும்
பணமிலாதவருலுகிற் பிணமாகையாலே
பாடுபட்டுப் பணந் தேடவேவேண்டும்
பாங்காய்மதிக்கவுட லெடுக்கவேவேண்டும்
ஒருகாசுடன் வேறு ஒருகாசுதேடும்
உபாயத்திலேயென்றும் ஊக்கம்வரவேண்டும்
காசுகளைக் காலணு வாக்கவேவேண்டும்
கருத்தாகவதனைமுடி போடவேவேண்டும்
வீணுகச்செம்பென்று செலவுசெய்யாமல்
வெள்ளிரூபாயாக்க விருப்பமுறவேண்டும்
தகுவெள்ளிரூபாயைச் சவரன்களாக்கும்
தந்திரமுயன்றுபொருள் சேர்க்கவேவேண்டும்
எவ்வாறுபணந்தேடும் வகையென்றுகேட்கில்
எளிதானமார்க்கங்களெத்தனையோ வுண்டு
பாவாடைரவிக்கைகள் தைக்கத்தெரிந்திருந்தால்
பலபேர்களுந்தேடி வந்துபொருள்தருவார்
கம்பளிநூல்வேலை கற்றுந்தெளிந்தால்
கழுத்துக்குப்பட்டைகள் ஜோடுபின்னிடலாம்
சித்திரவிசித்திர புஷ்பங்கள்செய்தே
சீரானகொண்டைக்கு அணியாகத்தரலாம்

சொகுசாய்த்தலைக்கணிய தொப்பிகள்செயலாம்
சுந்தரமுடன்வேறு பலவேலைசெயலாம்
அலங்காரமொக்குகள் அவைபோடத்தெரிந்தால்
அனைவர்க்குங்கற்பித்து அதிலும்பணம்பெறலாம்
சொன்னவகையாற்பணம் சுளுவாகத்தேடி
சுறுக்குப்பையிற்போட்டுச் சும்மாவிராமல்
வளர்பிறைதனைப்போல வளரவேநாளும்
வட்டிக்குமாறியதை வளர்க்கவேவேண்டும்
ஒன்றுபத்தாய்ப்பத்து நூறாகும்வழியே
உள்ளத்தில்நாடியதை உறுதிகொள்ளவேண்டும்
கைப்பொருளிருந்தால் கனமிக்கவுண்டு
கம்மல்புலாக்குடன் கத்திரிப்பாவல்
ஜிம்மக்கிகொப்புடன் சீரானமுருகு
சிங்காரஜடையில்லை திகழ்மயிர்மாட்டி
காப்புகொலுசுகள் கல்லட்டிகையும்
கதிர்வீசுவங்கியும் கையின்மோதிரமும்
ஒட்டியாணத்துடன் ஒளிர்கால்கொலுசும்
உற்றவிரலிற்பீலி காலாழிசுற்றும்
மஸ்லின்பாவாடைமத் தாப்புரவிக்கைகளும்
மிதிப்பிலாவளமுள்ள பட்டுப்புடவைகளும்
இன்னமும்பலநகைகள் ஏற்றவாடைகளும்
இனிதாகக்கொண்டணியுந் தொழிலாயிருந்தால்
பொருளுள்ளபெண்ணையே புருஷர்நாடுவதால்
புகழான பீ. ஏ, எம், ஏ, பட்டம்பொருந்தும்
நல்லமணவாளனை நலமாகவடைந்து
நகமும்தசையும்போல் நட்பாகவாழ்ந்து
நாடு, பொருள்கூடு, உனக்கீடு-எவர்தேடு (ஏலேலோ)

ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு

(31-ம் பக்கத் தொடர்ச்சி.)

"முன் ஒருகாலத்தில் ஓர் அரசன் இருந்தான். அவன் தன் அரண்மனையில் ஒருகிளியை வளர்த்துவந்தான். அது சுகஜாதிப்பக்ஷி. அதை அவன் அருமையாய் வளர்த்து வந்தான். ஒருநாள் அப்பக்ஷி வெளியில் உலாவிவிட்டு வரும்பொழுது தன் பெற்றோர்களைக் கண்டது. அதன்தந்தை தன்கூட வந்து சில நாள் வசிக்கும்படி அதை வற்புறுத்திற்று. அதற்கு அப்பக்ஷி தான் அரசன் உத்தரவில்லாமல் வாமுடியாதென்றும், தான் சென்று அரசனைக்கேட்டு ஒருவாரம் ரஜாவாங்கிக்கொண்டு வருவதாயும் மறுநாள் காலையில் அதே நேரத்திற்குத் தன் பெற்றோர்களை அவ்விடம்வரும்படிக்கும் சொல்லிவிட்டுத் திரும்பி அரசனிடத்தில் வந்து நடந்த சங்கதிகளைச் சொல்லிற்று. அரசன் மிகவும் வருத்தத்துடன் அதற்கு உத்தரவு கொடுத்தான். அதன்படி மறுநாள் காலையில் அக்கிளியானது புறப்பட்டுத் தான் குறிப்பிட்ட இடத்தில் தன் பெற்றோர்களைக் கண்டு அவைகளுடன் வெகு தூரத்திலிருந்த ஒரு பெரிய மரத்தின்பேரிலுள்ள தன் பிதுரார்ஜிதக்கூட்டிற்குச்சென்றது. அங்கு இரண்டுவாரம் இந்த மூன்றுகிளிகளும் ஸுகமாய்க் காலம் கழித்தன. பதினைன்காவது நாள் தன் பெற்றோர்களைப் பார்த்து "என் ரஜாமுடிந்து விட்டது. இனி

அரசன் என்னைத் தேடுவான். நான் போய்விட்டுவர உத்தரவு அளிக்கவேண்டும்" என்று கேட்டது. இரண்டுகிளிகளும் ஸம்மதித்துத் தங்கள்பிள்ளையிடத்தில்பிரியமாயிருக்கிற அரசனுக்கு ஏதாவது தகுந்த வெகுமதி கொடுக்க வேண்டும் என்று எண்ணி வெகுநேரம் யோஜித்து சிரஞ்ஜீவி மரத்துப் பழத்தில் ஒன்றைக்கொடுப்பது என்று தீர்மானித்தன. அப்பழத்தின்மஹிமை யென்னவென்றால் அதைத்தின்பவர்கள் வாலிபப்பருவத்தை யடைந்து நெடுங்காலம் ஆரோக்யமாய் ஜீவிப்பார்கள். அப்பழத்தில் ஒன்றைப்பறித்துப் பிள்ளைக்கிளியினிடத்தில் கொடுத்து கொஞ்சதூரம் வழிகொண்டு விட்டுப் பிறகு பிரிந்தன. கிளி கனமுள்ள அந்தப் பழத்தைத் தன் மூக்கால் கவ்விக்கொண்டு தன் யஜமானுடைய நகரத்தை நோக்கியபடி ஆகாயத்தில் பறந்தது. என்ன தான் வேகமாய்ப் பறந்தாலும், மூக்கில்பாரம் தூக்கிக்கொண்டுபோகிறபடியால் களைத்துப்போய் சாயந்திரம் ஆனதும் ஒரு பெரிய மரத்தை அடைந்து அதில் ஒரு பொந்தில்அப்பழத்தைப் பத்திரப்படுத்திவிட்டுத் தான் வேறு கிளையில் தூங்கிற்று. அந்தப் பொந்தில் இருந்த ஒரு கிருஷ்ண ஸர்ப்பம் இரவில் அப்பழத்தின்மேல் தன் விஷத்தை யெல்லாம் கக்கிற்று. இதை யறியாதகிளி மறுநாள் காலையில் எழுந்து அப் பழத்தை முன்போலவே தன் மூக்கில் கவ்விக்கொண்டு பறந்து அரண்மனையையடைந்து அரசன் தன் சபையிலே கொலு அமர்ந்திருக்கும் பொழுது அவனிடம் கொடுத்து அப்பழத்தின் மகத்துவத்தையும் சொல்லி வணங்கிற்று. அரசன் அப் பக்ஷியைப் புகழ்ந்து அப் பழத்தைச் சாப்பிட எத்தனிக்கும் பொழுது அவன் மந்

திரி தடுத்து ; இது ஒரு வேளை விஷப்பழமா யிருந்தாலும் இருக்கும். அதைப் பரீக்ஷை செய்தேசாப்பிடவேண்டும்" என்றுயுக்திசொன்னான். அதன்படியே அருகிலிருந்த ஒரு நாய்க்கு அப்பழத்தில் ஒரு துண்டு எறிய அந்த நாய் அந்தத் துண்டைத்தின்ற உடனே இறந்தது. அரசனும் திடுக்கிட்டு அக்கிளி தன்னிடத்தில் விசுவாசம் பாராட்டித் தன்னைக் கொல்ல நினைத்தது என்று எண்ணி முன்பின் யோஜியாமல் தன் கத்தியால் அக்கிளியை ஒரே வீசில் வெட்டி யெறிந்தான். பிறகு அவ் விஷப் பழத்தின் கொட்டையைத் தன் நந்தவனத்தின் ஒரு மூலையில் புதைக்க உத்தரவு கொடுத்தான். அக் கொட்டையும் காலக்கிரமத்தில் முளைத்து அழகிய பழங்களுடன் ஒரு மரமாய் வளர்ந்தது. அந்த மரத்தைச் சுற்றி ஒரு வேலி போட்டு, அப்பழங்களைச் சாப்பிட்டு யாராவது உயிர்விட்டால் என்ன செய்கிறது என்று எண்ணி அதற்குப் பாராவும் போட்டான். அதே ஊரில் ஒரு கிழப்பார்ப்பானும் அவன் மனைவியும் பிக்ஷை வாங்கி ஜீவித்திருந்தார்கள். அப்பிராமணன் தன்கஷ்ட திசையை யெண்ணிமிகவும் நொந்து இனிமேல் இம்மாதிரி கஷ்டப் படுவதைவிட விஷமரத்தின் பழத்தைத் தின்று உயிர்விடலாம் என்று நினைத்து நடுநிசியில் தன் படுக்கையைவிட்டு எழுந்து நந்தவனத்தை நோக்கி நடந்தான். அவன் மனைவியும் ஆச்சரியத்துடன் பின் தொடர்ந்தாள். காவல்காரன் தூங்கும் சமயம் பார்த்து அப்பிராமணன் அம் மரத்திலிருந்து ஒரு பழத்தைப் பறித்துத் தின்றான். தன் கணவன் இறந்த பிறகு தான் இருந்து பிரயோஜனமில்லை என்று அவன் மனைவி நினைத்துத் தன் புருஷனி

டத்தில் சொல்லிவிட்டுத் தானும் ஒரு பழத்தைப் பறித்துத்தின்றாள். உடனே சாவு வராமலிருப்பதைக் கண்டு இவ்விஷம் தலைக்கேற நாழியாகும் போலும் என்று எண்ணி இருவரும் வீட்டிற்குவந்து மறுதினத்தைப் பார்க்கப்போகிறதில்லை என்கிறநிச்சயத்துடன் கடவுளைத் தொழுது படுத்துக்கொண்டார்கள். மறுநாள் காலையில் அவர்கள் விழித்து எழுந்திருக்கும் போது கிழவன் பதினெட்டு வயது வாலிபனாயிருந்தான். அவன் மனைவி பதினாறுவயதுயுவதியாய் அப்ஸரஸ்திரீபோல் விளங்கினாள். இந்தச் செய்தி ஊர் முழுவதும் பாவியது; அரசன் காதிற்கும் எட்டியது. அரசன் அந்தப்பிராமணனை வரவழைத்து எல்லாவிஷயங்களையும் தெரிந்துகொண்டு, முன்பின் யோஜிக்காமல் தன் அருமைக் கிளியைக்கொன்று விட்டதற்காக மிகவும் துக்கித்தான். ஆகையினாலேதான், அரசே, "ஒருவன் தலையைச் சீவுமுன் நன்றாய் விசாரித்தே செய்யவேண்டும். நேற்று இரவு நான் கெட்ட எண்ணத்துடன் தங்கள் அந்தபுரத்திற்குள் பிரவேசித்ததாகத் தாங்கள் எண்ணி யிருக்கிறீர்கள். என்னைத் தண்டிக்குமுன் நான் சொல்வதைச் சற்றுக் கேளுங்கள்.

"நேற்று இரவு என்னுடைய பாராக்காலத்தில் ஊர் சுற்றி வரும்பொழுது அரண்மனை வாயிலிலிருந்து ஒரு ஸ்திரீ வெளியில் வருவதைக்கண்டேன். அவளைத்தடுத்து வினவ, அவள் தான் இந்த அரண்மனை ராஜ்யலக்ஷ்மி என்றும், அரசன் இன்றிரவே மரணமடைகிற படியால் தனக்கு இங்கு வசிக்க இஷ்டமில்லாமல் வெளியில் போவதாயும் சொன்னாள். அதற்கு "நான் அரசன் மரணமடை

